| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 218/2016 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சேகர் | நாள் | 30.11.2021 |
| தகப்பனார் பெயர் | பெரியசாமி | | |

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

என்னுடைய தாத்தா பெயர் மாரிமுத்து முதலியார். அவருக்கு என்னுடைய தகப்பனார், மாதேஸ் (எ) மாதேஸ்வரன் மற்றும் ராமாயி ஆகியோர் வாரிசுகள். வழக்கு சொத்து மாரிமுத்து முதலியார் சம்பாத்திய சொத்துக்கள் என்றால் என்னுடைய தகப்பனார், இரண்டு சித்தப்பாக்களும் சேர்ந்து சம்பாதித்த சொத்துக்கள். 1968ல் மாரிமுத்து முதலியார் தன்னுடைய மூன்று வாரிசுகளுக்கு எழுதிவைத்துள்ளார் என்றால் இல்லை. அந்த எழுதிவைத்த சொத்துக்களில் கிணறு, வீடு, நிலம் உள்ளது என்றால் சரியல்ல. மாதேசுக்கு 4 பெண்மக்கள். அதில் ஒருவர் இறந்துவிட்டார். 2வது மனைவிக்கு ஒரு பெண் உள்ளார். மாதேஸின் மனைவி கமலம் உயிரோடு உள்ளார். ஆனால் ஈஸ்வரி இறந்துவிட்டார். கமலாவிற்கு சுமார் 70 வயது இருக்கும். வசந்தாவிற்கு 60 வயது இருக்கும். சாந்திக்கு 50 வயது இருக்கும். சுந்தராம்பாளுக்கு 45 வயது இருக்கும். சம்பத்திற்கு 40 வயதாவது இருக்கும். தாவாசொத்துக்களை எழுதிகொடுத்த போது மேலே கூறிய நபர்களுக்கு திருமணம் நடைபெற்றுவிட்டது என்றால் ஆமாம். மேற்கண்ட 5 நபர்கள் வழக்கு சொத்திற்கு உரிமையாளர்கள் என்றால் மாதேஸ் அவர் சம்பாதித்த சொத்து என கூறுகிறார். நான் தவறாக கூறுகிறேன் எனவும், அது மாதேஸின் தகப்பனார் சம்பாதித்த சொத்து என்றால் அது பொய். மாதேஸ் பள்ளிப்பாளையத்தில் குடும்பத்துடன் 30 வருடங்களாக இருக்கிறார் என்றால் ஆமாம். குடும்பத்துடன் இருக்கிறார் என்றால் இளைய மனைவியுடன் தான் உள்ளார். தாவாசொத்தை எனக்கு எழுதிகொடுத்ததாக கூறும்போது பள்ளிப்பாளையத்தில் தான் இருந்தார் என்றால் ஆமாம். அ.வ.எண்.162/2016 என்ற பாகபிரிவினை வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர் என்றால் ஆமாம். உரிமை இருந்ததால் தான் அந்த வழக்கை தாக்கல்செய்துள்ளனர் என்றால் உரிமை இல்லை. உரிமை இல்லை என நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதி வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

ஒப்பம்/-எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.